**DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI**
**OS No. 01/2021**

பெயர் : திருமதி.ராமலெட்சுமி (PW–1) கிராமம்:

தந்தை / கணவர் பெயர் : தொழில் :

வயது :

30.09.2024 at 04.30 P.M.
1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–

1. எனது தாயார் பேச்சியம்மாள் எனக்கு 4, 5 வயதாக இருக்கும்போதே என் அம்மா அவரது 35 வது வயதில் இறந்து விட்டார்.

2. எனது தாயார் இறந்தவுடன் 1 வருடம் கழித்து எனது அப்பா 1ம் பிரதிவாதியை 2 வது திருமணம் செய்து கொண்டார். 1ம் பிரதிவாதி எனக்கு திருமணம் ஆகும் வரை என்னை பராமரித்து வளர்த்து வந்தார் என்றால் சரியல்ல. எனது அப்பா அவரது சகோதரர்களுடன் கூட்டுக்குடும்பமாக வாழ்ந்து வந்தார். அதனால் எனது பெரியப்பா, சித்தப்பா, எனது அப்பா ஆகியோர் என்னை நல்ல முறையில் பார்த்துக் கொண்டார்கள்.

3. எனக்கு 1979ம் ஆண்டு திருமணம் நடந்தது. எனக்கு திருமணம் முடிந்து இராமேஸ்வரத்தில் வசித்து வருகிறேன் என்றால் சரியல்ல. அவ்வப்போது பசும்பொன்னிலும் விவசாய வேலைக்காக வசித்து வருகிறேன்.

4. விவசாய நிலத்திலிருந்து வரும் லாபத்தில் எனக்கு பணமாக பங்கு கொடுக்கவில்லை. ஆனால் விளையும் பொருட்களை பங்கு கொடுத்தார்கள்.

5. எனது அப்பா பெயரில் உள்ள சொத்துக்களில் எனக்கு உள்ள பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். முத்துராமு, காந்தி ஆகியோர்

எனது அப்பாவின் உடன்பிறந்த சகோதரர்கள்.

6. முத்துராமு என்பவருக்கு 6ம் பிரதிவாதியான கந்தன், இறந்துபோன ஜோதிமுத்துராமலிங்கம் ஆகியோர் வாரிசுகள் ஆவார்கள். இறந்துபோன ஜோதிமுத்துராமலிங்கத்திற்கு 2 பெண் குழந்தைகள் உள்ளது.

7. கந்தன் தற்போது ஊருக்கு தெற்கே வீடு கட்டிவரும் இடம் பூர்விக சொத்து என்றால் சரிதான். அந்த சொத்தை இந்த வழக்கில் வழக்குச் சொத்தாக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

8. எனது அப்பாவிற்கு எத்தனை இலக்க சொத்துக்கள் பாத்தியப்பட்டது என்றால் 10 இலக்க சொத்துக்கள் சம்மந்தமாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனது பங்கினை பிரித்துக் கொடுக்க வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனது அப்பா சொத்தில் எனக்கு பாதி பங்கு வேண்டும்.

9. கூரிவட்டம் என்று வழக்குமொழியில் சொல்லும் சொத்தானது 33 சென்ட் நிலமாகும். அந்த இடம் எனது அப்பாவிற்கு பாத்தியப்பட்டது. அவர்களது சகோதரர்கள் ஏற்கனவே பாகம் பிரித்ததில் எனது அப்பாவிற்கு கிடைத்த சொத்து. அந்த சொத்திற்கு எனது சித்தப்பா மற்றும் பெரியப்பாவையும் சேர்த்து 3 நபர்களின் பெயரிலும் கூட்டு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

10. 4வது இலக்க சொத்தாக காட்டப்பட்டுள்ள சர்வே எண்.228/3Bல் கண்ட சொத்தானது சென்ட் ரூ.50,000/- பெறும் என்றால் சரியல்ல. அதற்கு மேல் மதிப்புடையது.

11. தாவா சொத்தை நான் அடைந்து அனுபவம் செய்து வருகிறேன் என்பதைக் காட்ட எந்த ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லை. 30 ஆண்டுகளுக்கு முன்பு எனது பெரியப்பா, சித்தப்பா, எனது அப்பாவிற்கும் வாய்மொழியாக பாகம் ஏற்பட்டது. அந்த விபரம் எனக்கு நேரடியாக தெரியும்.

எனது திருமணத்திற்கு பின்பு பாகம் செய்து கொண்டார்கள்.

12. எத்தனை வருடங்களாக பிரதிவாதிகள் எனக்கு பாகம் கொடுக்க மறுத்து வருகிறார்கள் என்றால் 2020ம் ஆண்டிற்கு மேல் மறுத்து வருவதால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

13. தாவா சொத்தின் கூட்டு அனுபவத்தில் நான் இல்லை என்பதால், அனுபவ பாத்தியத்தின் அடிப்படையில் பாகம் கோர என்னால் இயலாது என்றால் சரியல்ல. தாவா 8வது இலக்க சொத்தாக காட்டப்பட்டுள்ள சொத்திற்கு எனது அப்பாவிற்கும், அவரது உடன்பிறந்த சகோதரர்களுக்கும் கூட்டு பாத்தியம் உள்ளது. அந்த சொத்தின் மதிப்பு எனக்கு தெரியாது. அந்த சொத்தில் நான் தனிப்பட்ட முறையில் விவசாயம் செய்யவில்லை.

14. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள வழக்கு பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கில் அத்தியாவசிய தரப்பினர்களை சேர்க்கவில்லை என்பதால் நான் தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பகுதிபாக பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளதால் நான் தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

(S/d. ஜெ. சங்கீதா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.